**<u>O.S.No.25/2023</u>**

<u>வா.சா.2, திரு. கணேசன்</u>
நாள் : 18.09.2025 நேரம் : 12.20PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)நான் பிறந்ததிலிருந்து காக்கூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரும் காக்கூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தகப்பனார் முருகேசன் 1வது வாதி என்றால் சரிதான். 2,3 வாதிகளின் தகப்பனார் சீனிவாசனும் காக்கூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் வாதி, 2,3 வாதிகளின் தகப்பனார் சீனிவாசன் மற்றும் 1ம் பிரதிவாதி உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 4ம் வாதியின் தகப்பனார் சந்திரன் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் சகோதரர்கள் என்றால் சரிதான்.

2)எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர்களில் 2 பெண் மக்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் குருவம்மாள் மற்றும் நாகலட்சுமி என்றால் சரிதான். எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு இடையே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு சர்வே எண். 56/1E பட்டா எண்.1818, விஸ்தீரணம் 3 ஏர்ஸ் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 56/1B பட்டா எண்.1815, விஸ்தீரணம் 6.50 ஹெக்டேர் 1ம் பிரதிவாதி பாஸ்கரனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி இடத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

3)1ம் பிரதிவாதி மதுரையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 12.10.2020ம் தேதி தனக்கு பாகப்பிரிவினையில் பாத்தியபட்ட சர்வே எண்.56/1Bயை மாதவன் மகன் மணிகண்டனுக்கு கிரையம்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணத்தில் வடக்கு மாலில் எழுதி கொடுக்கும் பாஸ்கரன் கைவசம் உள்ள நஞ்சை

என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 56/1Bல் மொத்த விஸ்தீரணமான 6.5 ஏர்ஸ்ல் தெற்கு பாகம் தான் 1ம் பிரதிவாதி மணிகண்டனுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மணிகண்டன் கிரையம் பெற்ற இடத்திற்கு நான் எந்த ஆட்சேபனை செய்யவில்லை என்றாலும், மேற்படி இடம் மணிகண்டனின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரிதான்.

4)வா.சா.ஆ.2 ஆவணம் எனது தகப்பனார் பெயரில் சர்வே எண். 56/1E ஏற்பட்டுள்ள பட்டா என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பட்டா ஏற்பட்ட நாள் 13.03.2009 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் சர்வே எண். 56/1B1 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா என்றால் சரிதான், ஆனால் அது எனது தகப்பனாரின் உடன் பிறந்த பெண் பிள்ளைகளுக்காக ஒதுக்கபட்ட நிலம். எனக்கு 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். குருவம்மாளின் மகளை தான் 1ம் பிரதிவாதி பாஸ்கரன் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5)குருவம்மாளின் மகளை திருமணம் செய்ததால் 1ம் பிரதிவாதியான பாஸ்கரனுக்கு குருவம்மாளின் பாகம் கிடைக்க பெற்றது என்றால் சரியல்ல. எனது தாத்தாவான ரத்தினம் பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவரது ஆண் மக்களுக்கு பாத்தியப்பட்டது போல பெண் மக்களுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது தாத்தாவின் பெண் மக்களுக்கு பாத்தியம் உள்ள சொத்துகளில் ஆண் மக்களுக்கு மட்டும் பாகம் பிரித்து கொள்வது போல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6)பாகப்பிரிவினையின் போது 1ம் பிரதிவாதியின் பெயரில் கூடுதல் விஸ்தீரணத்திற்கு பட்டா ஏற்பட்டதை எதிர்த்து வாதிகள் மேற்படி பட்டாவை ரத்து செய்ய கோரி மனுவோ, நீதிமன்றத்தில் வழக்கோ தாக்கல் செய்தோமா

என்றால் இல்லை. எங்களுக்கு தெரியாமலேயே 1ம் பிரதிவாதி அவரது பெயரில் கூடுதல் விஸ்தீரணத்திற்கு பட்டா ஏற்படுத்தி கொண்டார். தற்போது தாவா சொத்திற்கு 2ம் பிரதிவாதியின் பெயரில் தான் பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். பட்டா தவறாக மாற்றி போடப்பட்டுள்ளது. எனது தந்தை உடன் பிறந்த குருவம்மாள் மற்றும் நாகலட்சுமி தற்போது இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி குருவம்மாள் மற்றும் நாகலட்சுமியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7)2009ம் ஆண்டு முறையாக வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து அதில் தனக்கு கிடைக்க பெற்ற பாகத்தினை 1ம் பிரதிவாதி முறையாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மணிகண்டனுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்த சொத்தானது 2009ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதியின் தனித்த பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. 2009ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதியின் தனித்த பாத்தியப்பட்ட சொத்தில் நாங்கள் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மதுரையில் உள்ளதால் அவருக்கு பாகமாக கிடைக்க பெற்ற சொத்தை அபகரிக்க வாதிகள் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.00 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.09.18 16:40:59 +0530